22.10.2019
O.S.No.112/2018

வா. சா. 1 கணேசன் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

3 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை (தொடர்ச்சி)

1 ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த பவர் ரத்து செய்யும்போது எடுத்த வில்லங்க சான்றிதழ் என் வசம்தான் உள்ளது. அந்த ரத்து சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன். ரத்து சான்றிதழில் 2,3,4 பிரதிவாதிகள் கிரையம் பெற்ற விவரங்கள் உள்ளன என்றால் பார்க்கவில்லை. வில்லங்க சான்றிதழில் 2,3,4 பிரதிவாதிகள் கிரையம் பெற்ற விவரங்கள் இடம் பெற்றிருக்கும் என்றும் அதை தாக்கல் செய்தால் கிரையம் பற்றிய உண்மை விவரம் தெரிய வரும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1 ம் பிரதிவாதிக்கு 3 லக்கச் சொத்துக்கள் சம்மந்தமாக பவர் கொடுத்தேன். 989/2 சொத்து எனக்கு பாத்தியப்பட்டது இல்லை என்றால் தெரியாது. 989/2 சொத்துக்கு எனக்கு உரிமை உள்ளது என்று காட்ட நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் தெரியாது. அந்த சொத்து Eastern provins of the sisters of St. Charles நிர்வாக ஜெயமேரி அவர்கள் பேரில் உள்ளது என்றால் தெரியாது. 17.8.2007 ம் தேதி அவர்கள் கிரையம் பெற்ற விவரமும் தெரியாது. அந்த சொத்துக்கு என் பேரில் பட்டா இல்லை என்றால் சரிதான். 989/2 சொத்து எனக்கு பாத்தியமில்லாத சொத்து என்றும் அதை நான் நேரடியாக கிரையம் செய்யக்கூடாது என்பதால் 1 ம் பிரதிவாதிக்கு பவர் கொடுத்து கிரையம் செய்யப்பட்டது என்றால் தவறு. 989/2 சொத்தையும் சேர்த்துதான் 1 ம் பிரதிவாதி 2 ம் பிரதிவாதிக்கு கிரைய ஒப்பந்தம் போட்டுள்ளார் என்றால் தெரியாது. 1 ம் பிரதிவாதி 3 ம் பிரதிவாதிக்கு செய்த கிரைய ஒப்பந்தத்திலும் 989/2 சொத்து காட்டப்பட்டுள்ளது என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் எந்த எந்த சர்வே எண்களில் கண்ட சொத்துக்களை கிரைய ஒப்பந்தம் செய்துள்ளார்கள் என்று தெரியாது.

எவ்வளவு தொகைக்கு கிரைய ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது என்று படித்துப்பார்த்து தெரிந்துகொண்டேனா என்றால் தெரியாது. 989/2 சொத்து எனக்கு பாத்தியமில்லாத சொத்து என்றும் அதனால்தான் 1,2 மற்றும் 3 ம் பிரதிவாதிகள் வாதசாஆ.5 மற்றும் 9 கிரைய ஒப்பந்தங்களை ரத்து செய்துள்ளார்கள் என்றால் தெரியாது. வாதசாஆ.4 ல் கண்ட 2 வது லக்கச் சொத்தான 989/2 3 வது நபர்களுக்கு பாத்தியப்பட்டது என்பதால் அந்த சொத்துக்களுக்கு கிரையம் பெற சட்டக்கருத்துரை பெற இயலவில்லை என்பதால் அந்த சொத்துக்களை 2,3 பிரதிவாதிகள் கிரையம் பெறாமல் இரத்து செய்துவிட்டார்கள் என்றால் தெரியாது. நான் கோகுலம் சிட் பண்ட்ஸ் நிர்வாக இயக்குநருக்கு பவர் ஆவணம் எழுதிக்கொடுத்து அதன் அடிப்படையில் கிரையம் செய்தது செல்லாது என்று சமூகம் நீதிமன்றத்தில் மு.வ.151/2018 ல் வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். கோகுலம் சிட்ஸ்ல் ரூ.4 கோடி கடன் வாங்கியது சம்மந்தமாக அவர்களுக்கும் எனக்கும் வழக்கு நடக்கிறது என்றால் சரிதான். நான் சில உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளில் சம்மந்தப்பட்டுள்ளேன் என்றால் சரிதான். நிறைய வழக்கு அனுபவம் உள்ளது என்றும் எந்த சொத்தையும் நான் நேரடியாக கிரையம் செய்ய மாட்டேன் என்றும் பவர் ஏஜண்ட் மூலம் கிரையம் செய்வேன் என்றும் பின்னர் கொடுத்த பவர் செல்லாது என்று சொல்வேன் என்றும் லைப் சான்றிதழ் இல்லை என்றும் லைப் சான்றிதழ் போலியானது என்றும் தொடர்ந்து வீண் வில்லங்க விவகாரங்கள் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் ஆவணங்கள் செல்லாது என்று மட்டும் பரிகாரங்கள் கோரியுள்ளேன் என்றால் சரிதான். பிராது 11 வது பாராவில் வழக்குச்சொத்தைப் பொருத்து எனக்கு ஒரு தெளிவில்லாத நிலை உள்ளது என்று சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. சொத்து எனக்கு பாத்தியம் என்று விளம்புகை பரிகாரம் கோரவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள்

தாக்கல் செய்த எதிர்வழக்குரையை படித்து பார்க்கவில்லை. தாவா 3 வது அயிட்டச் சொத்து ச.எண்.989/2 எனக்கு பாத்தியமே இல்லை என்று எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளது பற்றி எனக்கு தெரியாது. ச.எண்.989/2 சொத்து திரும்ப வேண்டும் என்று கோரி காவல் துறை அதிகாரிகளிடம் மனுக்கொடுத்து விசாரணை நடக்கிறது என்றால் சரிதான். இந்த ச.எண்.989/2 சொத்தின் உரிமையாளர்கள் பேரில் வழக்கு கொடுக்கவில்லை என்றால் யார் பதிவு செய்துள்ளார்களோ அவர்கள் பேரில் கொடுத்துள்ளேன். தாவா 1,2 லக்கச்சொத்துக்கு வருவாய் ஆவணங்கள் என் பேரில் இல்லை. விண்ணப்பித்துள்ளேன். தற்போது அந்த சொத்து என் அனுபவத்தில் உள்ளதா என்றால் என் அனுபவத்தில்தான் உள்ளது. சொத்தின் வருவாய் ஆவணங்கள் 3,4 பிரதிவாதிகள் பேரில் உள்ளது என்றும் அவர்கள்தான் கிஸ்தி செலுத்தி வருகிறார்கள் என்றும் அவர்கள்தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால் தெரியாது. சசிக்குமார் பேரில் உள்ள குத்தகை பதிவு செய்யப்படவில்லை. அவர் என் உறவினர். சசிக்குமாருக்கு உண்மையிலேயே எந்தவித குத்தகையும் இல்லை என்றும் நிருபண வாக்குமூலத்தில் அவருக்கு குத்தகைக்கு கொடுத்ததாக சொல்லி இருப்பது பொய் என்றால் சரியல்ல. 3 ம் பிரதிவாதி திண்டுக்கல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் மு.வ.183/2018 வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வரும் நிலையில் இந்த வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. கடன் தேவைக்காக பவர் எழுதிக்கொடுத்ததாக சொல்வது பொய் என்றும் தாவாச்சொத்தை விற்பனை செய்வதற்காகத்தான் 1 ம் பிரதிவாதிக்கு பவர் கொடுத்தேன் என்றால் சரியல்ல. 1 ம் பிரதிவாதி சரியான பிரதி பிரயோஜனத்தின்பேரில்தான் 3, 4 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்து அவர்கள் பட்டா பெற்று கிஸ்தி செலுத்தி அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. வாதசாஆ.6 பவர் இரத்து ஆவணம் பதிவு செய்யப்படும்போதே 3 ம் பிரதிவாதியின் கிரைய விவரங்கள் எல்லாம் தெரியும் என்றும் அந்த காலகட்டத்தில் உரிய காலத்திற்குள் கிரையத்தை இரத்து செய்ய நடவடிக்கை எடுக்காததால் இந்த வழக்கு சட்டப்படி செல்லாது என்றும் தாவா தள்ளுபடியாகனும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை

கோகுலம் சிட்ஸ் நிறுவனத்திடம் சீட்டு கட்டி முடித்து ஆவணங்கள் திரும்ப கொடுக்காதது சம்மந்தமாக வழக்கு நிலுவையில் உள்ளது.

Sd.M.K.Jamuna,
Prl.District Judge,
Dindigul